பரிவாகசபையோர்க்கு காட்டப்பாமீ
பதருவார் ௪ தருவார் பணிகுவாரே

(வ-ம்) கால்படி அரிசியை மூன்றுபுறை துணிபோட்டு தில்ஆ மூட்டைகட்டி சுண்ணாம்புகால்வாய் கீழேவைத்து வெந்தபிரகுஎடுத்து வைத்துக்கொண்டு ஜாலமெடுக்குஞ்சபையில் ஒரு குடுவை வைத்து அதில்பாதிகுடுவை அரிசிபோட்டு இதைக்கிணற்றில் இறங்கிச்சமைத்து வருவேன் என்று கிணற்றிலிரங்கி அரிசிக்குத்தகுந்த ஜெலம்விட்டு குடுவையை தண்ணிக்குமேலே தூக்கிபிடித்திருக்கவேண்டும் குடுவையை மூழ்த்தினால் அரிசியெல்லாம் போய்விடும் சற்றுநேரம்பிருந்து வரும்போது தலைமுதலானதுகளைநனைத்துக்கொண்டுவந்தால் சபையோர்கள் உன்னை ஜலத்துக்குள்ளே யிறங்கி சமைத்தானென்று ஆச்சரியப்படுவார்கள்.

௨௬-வது துணியில் சோளம்பொரிக்கும் வித்தை.

பணியவேசோளமதை மூட்டைகட்டி
பக்குவமாய்முன்போல வைத்தெடுத்து
துணியதனைசவுக்கியமாய் பிடிக்கச்சொல்லி
துளியாகஜெலந்தெளித்து வருத்தையாகில்
மணிகளேமுத்துபோல் பொரியும்பாரு
மந்திரக்காரனென்று மயங்குவார்கள்
அணியணியாய் மீண்டிருக்கும் ஜாலவித்தை
அறைகின்ற னறிவாகக் கேட்டுக்கொள்ளே.

(வ-ம்) சோளத்தை முன்போலவே மூட்டைகட்டி சுண்ணாம்புக்கால்வாயில் வைத்தெடுத்துக்கொண்டு துணியை சவுக்கியமாய் பிடிக்கச்சொல்லி நடுவில் சோளத்தைபோட்டுகொஞ்சம்ஜலத்தை தெளித்தால் முத்துப்போல்பொரியும் சபையோர்கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

௨௭-வது மீன்பிடிக்கும் வித்தை.

கேட்டுக்கொள் திருகுகள்ளித் தண்டையப்பா
திடமாகமுழமுழமா தரித்துக்கொண்டு
வாட்டமாய் தாவுகளில் ஏரிதன்னில்
வளமான குளங்களிலே குட்டைதன்னில்
நீட்டமாய் மாரளவு துலவுக்கொன்று
நெருங்கவெ போட்டங்கே நின்றுபாரு
ஆட்டத்தை யென்சொல்வேன் மீன்களெல்லாம்
அடியோடுமேல்தோன்றி மிதந்துபோ

(வ-ம்) திருகுகள்ளித் தண்டை துண்டுதுண்டாக வெட்டி குளங்கிணறு முதலானயிடங்களில் நெருங்கப்போட்டு சற்றுநேரம் நின்றாலும் பேன்கொட்டையைவருத்துஉரித்தயிரு சரியாய்வைத் தரைத்து மேற்படி யிடங்களில் தூவினாலும் வேண்டிய வரையில் வாரிக்கொள்ளலாம்.

உஅ-வது கையில் பந்த மேந்துஞ்சாலம்.

ஆமடாகத்தாழை மடலின் சோத்தை
  அப்பனே பில்லை பில்லை யாகவெட்டி
நாமடா கையிலே பதியவைத்து
  நலமான சல்லாவை மேலேமூடி
வேமடா பந்தத்தை கொளுத்திக்கொண்டு
  வையடா கையிலே யேற்றினக்கால்
பேரமடா ஜெலம்போல குளிர்ந்திருக்கும்
  பொய்பல்ல சத்தியமாய்செய்துபாரே.

(வ-ம்) சத்தாழைமடல் சோத்தை பில்லைபில்லையாக அறுத்து உள்ளங்கையில்வைத்து மேலே சல்லாத்துணியைமூடி எண்ணெப் பந்தம் கொளுத்திவைத்து ஏந்தினால் பந்தம் பிரகாசமாயெரியும் கைசுடாது சல்லாத்துணியும் வேகாது இது திஷ்டாந்திரம்.

உகூ-வது நெருப்பில்லாமல் கற்பூரங்கொளுத்தும்வித்தை.

சிறுபயறினளவு திமிர்பாஷாணத்தை
  சூடமென்றக் கற்பூரக்கட்டிமீதில்
அறிவாகபதியவைத்து கையிலேந்தி
  அப்பனேசபையோர்க்கு நன்றாய்க்காட்டி
குருவுக்கு தூபமென்று ஊதப்பாரீ
  கொழுந்தோடி யெரியுமது குருவேசாட்சி
சிறுமணவூர்முனிசாமி செய்தஜாலம்
  சிநேகிதரே உங்களுக்கு சொல்லச்சொன்னான்.

(வ-ம்) சிறுபயறளவு திமிர்பாஷாணத்தை கற்பூரக்கட்டிமீதில் வைத்து கையிலேந்தி சபையில் நன்றாய்க்காட்டி குருவுக்கு தூப மென்று சொல்லி ஊதினால் குபீலென்று எரியும் சபையோரெல் லாம் ஆச்சரியப்படுவார்கள்.

இரண்டாம்பாகம்முற்றிற்று.